**கவனிக்க.-** *2018.03.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *மற்றும் பகுதி* IV(*அ*) *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இந்த வர்த்தமானியின் பகுதி* VI *இல், 2018 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்ட நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்கள மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2064 - 2018 මාර්තු මස 23 වැනි සිකුරාදා - 2018.03.23

*2064 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 62 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 64 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை தேயிலைச் சபை (திருத்தம்) சட்டமூலம் *2018*, மாச்சு மாதம் *09* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்தம்) சட்டமூலம் *2018*, மாச்சு மாதம் *09* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


61- B81265-353(2018/03)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாண சபையின் பொலநறுவை மாவட்டத்தில் அமைந்துளள தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் என். ஏ. ஏ. எஸ். நிஸங்க ஆரச்சி ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982, சனவரி 26 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள பொ/ப்ர/2094 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கடவலவெவ பொலநறுவை எனும் முகவரியில் வசிக்கும் கொன்சேலாகே விமலாவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு. பொலநறுவை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 21/2546 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.03.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமை யாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.04.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

பொலநறுவை நிர்வாக மாவட்டத்தின் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவின் மெத பற்றில் 73 டி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பந்திவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும். நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு எப். சி. பி. பொ 110, பிற்சேர்க்கை 01 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 455 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 02 ஏக்கர் 00 றூட் 02 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 456 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 462 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 453 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 454.

என். ஏ. ஏ. எஸ். நிஸங்க ஆரச்சி,
பிரதேச செயலாளர்,
தமன்கடுவ.

2017, திசெம்பர் 12.

3 - 827

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில், அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் ராஜபக்சகே திலின பிரதீப் சுமனசேகர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.11.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/ பி/ 819 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளராகிய பதுபொல எனும் முகவரியில் வசிக்கும் யத்தலகமராலலாகே ஆமிநோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் B/01/106 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.09.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளர் ஒருவராவதற்கு சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கை யிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால்அறியத் தருகின்றேன். இது தொடர்பாக எதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2018.04.27 ஆந்திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

நுவரெலியா நிருவாக மாவட்டத்தில் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் அம்பகமுவ பற்றில் / கோறளையிலுள்ள புலத்கம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதுபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இ.கி.வ 100 இரேகை வரைதலில் 242 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டதும் 00 ஏக்கர் 02 றூட் 02 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தை உடையதுமான. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி:

வடக்கு : இ.கி.வ 100 காணித் துண்டு இல 240;
கிழக்கு : இ.கி.வ 100 காணித் துண்டு இல 243;
தெற்கு : இ.கி.வ 100 காணித் துண்டு இல 260;
மேற்கு : இ.கி.வ 100 காணித் துண்டு இல 241.

ஆர்.டி.பி. சுமனசேகர,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்தேனை.

2017, திம்பெர் 06.

3 - 828/1

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாண சபையின் கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் டப்.எல்.ஆர். இந்திக்க லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் பிரிவின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.09.06 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள කෑ/ඝ/2016 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரித்தாளராகிய முங்கொட்டுவ குடியேற்றத்தில் வசிக்கும் ஹரிகல கெதர முதியன்ஸே என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கேகாலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ரஜி/1/21 ஆம் இலக்கத்தின் கீழ் 1983.10.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமை யாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப் பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2018.04.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கேகாலை நிருவாக மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில் கினிகொட கோரலவில் கூரெம்பொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கூரெம்பொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலை நில அளவை அத்தியட்சகர் என்ப வரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவை நாயகத் தினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இலக்கம் 113, மேலதிக இலக்கம் 02 இல் துண்டு இலக்கம் 45 ஐக் கொண்ட 00 ஏக்கர், 01 ரூட், 04.9 பர்சஸ் விஸ்தீரணம் கொண்டதுமான கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான முங்கொட்டுவ எனும் அரச காணி :

வடக்கு : குடாகம – பின்னவல கம்சபா வீதி;
கிழக்கு : இ.கி.வ 113 இல் மேலதிக இலக்கம் 2 இல் துண்டு இலக்கம் 44;
தெற்கு : இவ் வரைபடத்தில் துண்டு இலக்கம் 44;
மேற்கு : இ.கி.வ 113 இல் துண்டு இலக்கம் 30.

டபிள்யூ.எல்.ஆர். இந்திக லியனகே,
பிரதேச செயலாளர்,
ரம்புக்கனை.

பிரதேச செயலகம்,
ரம்புக்கனை,
2018, சனவரி 15.

3 - 828/2

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்தி கட்ளைச் சட்டத்தின் 19(4) உபபிரிவுக்கேற்ப 1995 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 05 ஆந் திகதி இல–11, யாய 09, மஹ அம்பகஸ்வெவ யில் வசிக்கும் ராஜபக்ஷ முதியன்சேலாகே பொடிஹாமினே என்பவருக்கு 4/30/10 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட பொலநறுவை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1995.07.08 ஆந் திகதி பதிவேட்டிள் பக்கத்தில் பதிவுசெய்ய ப்பட்டுள்ள. கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சீ. எம். கருனாரத்ன ஆகிய நான், இத்தாலின் மூலம் அறியத்தருகிறேன், ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2018.05.25 க்கு முன்னர் எமுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட F.C.P. 425 ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவையாளர் என்பவரினால் தயாரிக்கப்பட்ட காணித்துண்டு இலக்கம் 291 எனக் காட்டப்பட்டுள்ளதும் பொலநறுவை நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட மெதிரிகிரிய பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த சிங்கள பற்று/கோரளையிலுள்ள 105-ஜயதுகம கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த மஹ அம்பகஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 0.4930 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி இதன் எல்லைகள் வருமாறு மேட்டு நிலம்:

வடக்கு : காணித் துண்டு 292, 287, 288;
கிழக்கு : காணித் துண்டு 287, 288, 290 2/2;
தெற்கு : துண்டு இலக்கம் 307;
மேற்கு : துண்டு இலக்கம் 292.

சீ. எம். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்
மெதிரிகிரிய.

2017, ஒற்றோபர் 19.

3 - 942

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/48998.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- EP/28/LS/BAT/MN/SL/17.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட டச்பார் 172 C கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த டச்பார் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் P.P. Mada 2844 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல 01 என காட்டப்பட்டுள்ள 02 ஏக்கர் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் சோமாஸ் லங்கா தனியார் நிறுவனம் வ-து விண்ணப்பி த்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : பீபீ மட 2844 இல் காணித்துண்டுகள் இல 4,3 மற்றும் 2, பீபீ மட 6054 இல் காணித்துண்டு இல 19, பீபீ மட 72 இல் காணித்துண்டுகள் இல 3 மற்றும் 5, புதிய டச்பார் வீதி ;

கிழக்கு : பீபீ மட 72 இல் காணித்துண்டுகள் இல 3 மற்றும் 5, புதிய டச்பார் வீதி, பீபீ மட 823 இல் காணித்துண்டுகள் இல 10, 9 மற்றும் 34;

தெற்கு : பீபீ மட 823 இல் காணித்துண்டுகள் இல 10,9,34,14 மற்றும் 15 பீபீ மட 72 இல் காணித்துண்டு இல 3, பீபீ மட 6054 இல் காணித்துண்டு இல 19, பீபீ மட 917 இல் காணித்துண்டு இல 1, பாதை;

மேற்கு : பீபீ மட 2844 இல் காணித்துண்டுகள் இல 4,3 மற்றும் 2, பீபீ மட 6054 இல் காணித்துண்டு இல 19, பீபீ மட 72 இல் காணித்துண்டுகள் இல 3 மற்றும் 5.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.02.14 தொடக்கம் 2048.02.13 வரை);

**வருடாந்தக் குத்தகை** .- குத்தகையானது அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியயைவிட (ரூபா 50,00,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா 50,00,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு சேர்க்கப்பட வேண்டும்;

தவணைப்பணம்:- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்த்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்டகாலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைககு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர் (காணி,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 23.

3-1004

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/51276.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- ஈபீ/28/எல்பீ/எல்எஸ்/பீஏடீ/எம்என்டபிள்யூ/12.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

மட்டக்களபபு மாவட்டம் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுமண்டபத்தடி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த புதுமண்டபத்தடி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற உத்தியோகத்தினரால் வரைபடத்தில் கொண்டுள்ள 20 பேர்ச்சஸ் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டு டயலொக் அக்ஷியாடா பீஎல்சீ நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : பாதுகாப்பு அரண் ;
தெற்கு : அரச காணி ;
மேற்கு : அரசி காணி ;

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்டும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.01.26 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி 30 வருடங்கள்);

**வருடாந்தக் குத்தகை.**- 2018 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ரூபா 5,000,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும் இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்;

தவணைப்பணம் - தவணைப்பணம் அறவிடப்படமாட்டது;

(ஆ) குத்தகைக்கரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திறகுள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.01.26 ஆந் திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும் அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமனியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 07.

3 - 1005

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/55469.
பிரதிக்காணி ஆணையாளரின்
இல.:- பி.கா.ஆ/ஹம்/இ2/திஸ்./தீவ.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அம்பாந்தோட்டை மாவட்டம் திஸ்சமகாராம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட டாவேவலன கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பண்ணகமுவ கிராமத்தில் LC/TSS/2015/08 சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 01

ஏக்கர் 03 றூட் 0.64 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் திரு கம ஆராச்சிகே இசான் சதுரங்க விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எம். எம். சோமசிறிக்கு சொந்தமான காணி;
கிழக்கு : குணதாச தேவேந்திராக்கு சொந்தமான காணி ;
தெற்கு : பி. ஆனந்தவீர மற்றும் குனதாச பத்திநாயக்க வுக்கு சொந்தமான காணி;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் A மற்றும் வீதிக்கான ஒதுக்கு ;

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2017.12.22 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை**.- 2017 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2017 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரு 5,000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீடாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்;

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

தவணைப்பணம் - அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்கரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திறகுள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2017.12.22 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக் குழு உள்ளிட்ட வேறு நிறுவங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்க தாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

கே. ஜீ. ஏ. கே. பளுகஸ்வேவ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 28.

3 - 1021

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.